https://puthusudar.lk/
puthu

# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

10TH APRIL 2024 | WWW.PUTHUSUDAR.LK | WEDNESDAY | ISSUE: 75
Special Edition







வாசகர்களுக்கு
நோன்புப் பெருநாள்
நல் வாழ்த்துக்கள்!

மலர்ந்துள்ள பண்டிகைக் காலத்துடன் நாட்டின் சௌபாக்கியம், சுபீட்சம் மலர்ந்து ஒற்றுமை மற்றும் சகோதரத்துவம் மேலோங்க "புதுச் சுடர்" இன் வாழ்த்துக்கள்!

# தமிழ் வேட்பாளர்: ரணிலை பாதுகாக்க டயஸ்போரா திட்டம்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வடக்கு-கிழக்கு தமிழர்கள் சார்பில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியானது ரணில் விக்கிரமசிங்கவை தேர்தல் தோல்வியில் இருந்து பாதுகாக்கும் தமிழ் டயஸ்போராக்களின் திட்டமாகும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்கில் தமிழர்கள் மத்தியில் சஜித் பிரேமதாசாவும் அனுரகுமார திஸாநாயக்கவும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றனர்.ரணில் விக்ரமசிங்காவுக்கான வாக்கு விகிதம் மிக மிக குறைவாகவுள்ளது.

இந்த நிலையில்,சஜித் மற்றும் அனுரவிற்கு தமிழர்களின் வாக்குகள் செல்வத்தைத் தடுப்பதன் மூலம்தான் தெற்கில் ரணிலால் ஓரளவாவது வெற்றியை நோக்கிப் போராட முடியும்.

அந்த வாக்குகளைத் தடுப்பதற்கான ஒரே வழி தனித் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதுதான்.அதற்காக டயஸ்போராவின் பின்னணியில் சில தமிழ் கட்சிகள் இப்போது களத்தில் குதித்துள்ளன.இந்தக் கட்சிகள் அனைத்தும் ரணில் ஆதரவு கட்சிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வேட்பாளர் வெல்லமாட்டார் என்று தெரிந்தும்கூட ஏன் நிறுத்தப் போகிறீர்கள் என்று தமிழ் மக்கள் தரப்பில் இருந்து கேள்விகள் முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தை வளரக்கும் தினமாக பெருநாள் அமையட்டும்

இஸ்லாமிய நாட்காட்டியில் ஒன்பதாவது மாதமாகக் கருதப்படும் புனித ரமழான் மாதமானது, முஸ்லிம் சகோதரர்களுக்கு சிந்தனை மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கான மாதமாகக் கருதப்படுகிறது. இந்த ரமழான் மாதம், நல்வாழ்வு மற்றும் நல்வாழ்வின் கலங்கரை விளக்கமாக இருப்பதோடு நம்மிடையே ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தை வளர்க்கிறது.

சாதி, மத பேதமின்றி இலங்கையர்கள் என்ற வகையில் நாம் அனைவரும் எதிர்கொண்ட இக்கட்டான காலகட்டத்தை கடந்து நாட்டில் நல்லதொரு சூழல் உருவாகியுள்ள இவ் வேளையில் எமது சக முஸ்லிம்களுக்கு ரமழான் பண்டிகையை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வாய்ப்பு இந்த வருடம் கிடைத்துள்ளதையிட்டு நான் ஆனந்தமடைகின்றேன்.

இந்நாட்டில் ரமழான் நோன்பு காலத்தை முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி, அனைவரும் தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் காலமாக கருதுவதே சரியானதென நான் நினைக்கிறேன்.

தனிமனித முன்னேற்றத்தைப் பொருட்படுத்தாமல், கூட்டுச் சமூக விழுமியங்களை உயர்த்துவதற்காக உருவாக்கப்படும் இவ்வாறான விடயங்கள், வீழ்ச்சியடைந்த இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும், நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வதற்குமான கூட்டு முயற்சிக்கான அடிப்படையை வழங்கும் என்றும் நான் நம்புகிறேன்.

அர்ப்பணிப்பு, சுயக்கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை உள்ளிட்ட ரமழானில் முன்னிலைப்படுத்தப்படும் விழுமியங்கள், அதை நோக்கிய பயணத்தில் சரியான வழிகாட்டியாக அமையும் என்ற எதிர்பார்ப்புடன், இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கும், முழு உலக முஸ்லிம் சமூகத்திற்கும் சமாதானம், நல்லிணக்கம் நிறைந்த இனிய ரமழான் பெருநாளாக அமைய இதயப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# நம்பிக்கையுடன் நாட்டுக்காக கைகோர்ப்போம்

## அமைச்சர் அலி சப்ரி



புனித ரமழான் மாதத்தில் நாம் கடைப்பிடித்த தியாகங்கள், நற்செயல்கள் அனைத்தையும் தொடர்ந்தும் பேணிவர இந்தப் புனிதமான ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தினத்தில் உறுதிபூண வேண்டும். ஒற்றுமை, அமைதி, தியாகம் பரஸ்பரத் தன்மை, பாரம்பரியங்களை கடைப்பிடித்தல் போன்றவைகளின் அடிப்படையில் பசித்திருந்து, விழித்திருந்து செய்த நல் அமல்கள் ஆண்மீகத்தை மேலும் வலுவடையச் செய்து, பூரணமான மனிதநேயம், இரக்கத் தன்மை, விட்டுக்கொடுப்பு போன்றவற்றை எமக்கு கற்பித்துள்ளன.

உள்நாட்டிலும், உலக அளவிலும் நாம் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி சிந்திப்பதுடன், இப் பெருநாள் தினத்தின் மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில், தேவையுடையோருக்கு உதவிக்கரம் நீட்ட அனைவரும் ஒன்றினைய வேண்டும்.

இலங்கையானது, பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கைகளின் பன்முகத்தன்மையில் காணப்படும் வலிமைக்கு சான்று பகரும் அதே வேளை, நம் முன்னேற்றங்களின் போது அமைதியான, வளமான மற்றும் இணக்கமான நாட்டை

02 ➤

# ஈதுல் பித்ர் தினத்தன்று சகோதரத்துவம் மலரட்டும்

## எதிர் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ



உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் மாதம் பூராவும் நோன்பு நோற்று பின்னர் ரமழான் மாதத்தின் தலைப்பிறை கண்டதும் கொண்டாடும் ஈதுல் பித்ர் பெருநாள் இஸ்லாமிய மத நாட்காட்டியில் மிக முக்கியமான விழாவாகும். ரமழான் என்பது இஸ்லாத்தின் ஆன்மீகம் மட்டுமன்றி மனித மற்றும் சமூக விழுமியங்களை அங்கீகரிக்கின்ற

02 ➤



www.puthusudar.lk
2024 APRIL 10 - WEDNESDAY

# சஜித்தின் கதை அவ்வளவுதான்

ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸ ாநாயக்கவின் அலைதான் இப்போது அடிக்கிறது.ஜனாதிபதி தேர்தலில் அவர் வெல்வதற்கு வாய்ப்புள்ளது என்று கூறுகின்றன ஆய்வுகள்.உளவுத் துறை அறிக்கையும் அதையே சொல்கிறது.

இதனால் அனுரவை வீழ்த்த வேண்டிய தேவை ஜனாதிபதி தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.ரணிலையும் சஜித்தையும் இணைத்தால் அனுரவை இலகுவாக வீழ்த்தலாம் என்று நினைத்துக்கொண்டு ஜனாதிபதி தரப்பினர் சிலர் இப்போது இருவரையும் இணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதை விடவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதுதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு முக்கியமாக உள்ளது.

தேர்தலுக்கு 06 மாதங்கள் இருக்கின்றபோதிலும் இப்போதிருந்தே அதற்கான வேலைத்திட்டங்களை தொடங்கிவிட்டார் அவர்.

அரசியல் தீர்வை வழங்குகிறேன் என்ற போர்வையில் தமிழர்களின் வாக்குகளை சுருட்டுதல்.கூட்டணிகளை அமைத்தல்,மொட்டு கட்சியை உடைத்தல்,சஜித் தரப்பை பிரித்தல் என தேர்தலை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளைத்தான் காண முடிகிறது.

அந்த வகையில்,தற்போது அரசியல் வட்டாரத்தில் பரவலாகப் பேசத் தொடங்கியுள்ள விடயம் என்னவென்றால் சஜித்--ரணில் இணைவுபற்றித்தான்.

2019 ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய மொட்டு கட்சியின் வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிடுவதென்றால் அது ரணிலால் முடியாது.சஜித்தாலேயே முடியும் என்று மக்கள் கருதியதால் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் சஜித் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

கோத்தா 69 லட்சம் வாக்குகளை பெற்று வெற்றிபெற்றபோதிலும்,சஜீத்தால் 55 லட்சம் வாக்குகளையேனும் பெற முடிந்தமை அன்றைய காலகட்டத்தில் பெரிய விடயம் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் அந்த எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

இத்தருணத்தில் சஜித் ரணிலுடன் இணைந்து அந்த வெற்றியை அநியாயமாக இழப்பாரா?

ஜேவிபி தலைவர் அனுரகுமாரவின் வெற்றியைத் தடுப்பதற்காக சஜித்தையும் ரணிலையும் இணைப்பதற்கு ரணில் தரப்பு முற்பட்டாலும் அந்த இணைவால் அனுரவை விடவும் அதிகம் பாதிக்கப்படப்போவது சஜித் பிரேமதாஸ ாதான்.ரணிலின் எதிரி அனுர அல்ல சஜித்.

சஜித் இணைந்தால் சஜித்துக்கு என்ன நடக்கும் என்று எல்லோருக்கும் தெரியும்.சஜித்தை அருகில் எடுத்து அப்படியே அழித்துவிடுவார் ரணில்.

தன்னை ஜனாதிபதியாக்கிய மொட்டு கட்சிக்கு அவர் செய்வதைப் பாருங்கள். அந்தக் கட்சியை இரண்டு, மூன்று துண்டுகளாக உடைத்துவிட்டார். அதில் பெரிய துண்டை தன்னோடு இணைத்துக்கொள்வதற்குத்

திட்டமிட்டுதான் மொட்டு கட்சியின் நிமால் லான்ஸாவை வைத்து கூட்டணி ஒன்றை உருவாக்கி வருகிறார் ரணில்.

மொட்டில் இருந்து எப்படியும் 40 பேரை இழுத்தெடுப்பேன் என்று ரணிலுக்கு வாக்குறுதியளித்துள்ளார் லான்ஸா.இதில் லான்ஸாவும் பிரசன்ன ரணதுங்கவும் தீவிரமாக இறங்கியுள்ளார்கள்.

இப்படி தன்னை ஜனாதிபதியாக்கிய கட்சிக்கே துரோகம் செய்யும் ரணில் ,தன்னை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடித்த சஜித்தை மாத்திரம் விட்டுவைப்பாரா?

சஜித்தின் வளர்ச்சி ரணிலுக்கு என்றுமே ஆபத்துதான்.இதனால் சஜித்தை அருகில் எடுத்து அழிப்பதுதான் ரணிலின் திட்டம்.

இந்தத் திட்டத்துக்கு சஜித் என்றுமே துணைபோகமாட்டார்.தனது கழுத்தை அறுக்கும் கத்தியை அவரே தீட்டிக் கொடுப்பாரா?




## நம்பிக்கையுடன்..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்டியெழுப்புவதற்கான கூட்டு முயற்சிகளுக்கும் இப் பெருநாள் தினம் வழிகோலாக அமையட்டும். உலகெங்கிலும் உள்ள எமது உறவுகளிடம் நட்புடனும், நல்லெண்ணத்துடனும் இதனைத் தெரிவிக்கிறேன்.

ஒற்றுமையுடன் நாட்டின் வெற்றிக்காக பாடுபடும் நமது ஒவ்வொரு நிமிடங்களும், ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தினத்தில் பிரார்த்தனைகளாக அமைவதுடன், காஸ ா மக்களையும் நமது பிரார்த்தனையில் உள்வாங்கி, அவர்கள் படுகின்ற சிரமங்களுக்கு நியாயமான மற்றும் அமைதியான தீர்வை பெற்றுக் கொள்ளவும் பிரார்த்திப்போம்.

நம்பிக்கையுடனும், உளத்தூ ய்மையுடனும் நாட்டின் எதிர்காலம் சிறக்க பிரார்த்திப்பதுடன், ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சியின்பால் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடவும் எனது வாழ்த்துக்கள்.

## ஈதுல்..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதனை பறைசாற்ற கிடைத்த ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

மாதம் பூராவும் நோன்பின் சிறப்பைப் பேணி ரமழான் மாதத்தின் தலைப்பிறை கண்டதும் கொண்டாடப்படுகின்ற இந்த புனித பெருநாளை, உலகிற்கு தர்மம் மற்றும் சமத்துவச் செய்தியை எடுத்துரைக்கும் மிக முக்கியமான சமய விழா என்றும் அழைக்கலாம்.

இலங்கை வாழ் சமூகத்துடன் பண்டைய காலம் தொட்டு இஸ்லாமியர்கள் நெருங்கிய சகோதரத்துவத்துடன் பேணிய உறவு உலகிற்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. இந்த தேர்தல் ஆண்டில் சகோதரத்துவ பந்தத்தை பலவீனப்படுத்த பல்வேறுபட்ட இனவாதிகள் முயற்சிக்கலாம். ஆனால் அந்த சகோதரத்துவத்தை தொடர்ந்தும் சேதப்படுத்த ஒரு சிறிய இனவாதக் குழுவுக்கும் நாம் இடமளித்தல் கூடாது.

மக்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதிப் போராட்டத்தின் போது இந்த சகோதரத்துவத்தின் கரங்கள் நாட்டுக்காக நீட்டப்பட்டதைக் கண்டோம். சிங்கள, இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் என எந்த இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும், ஒரு தாயின் பிள்ளைகளாக ஒரே தேசமாக நம் நாட்டிற்காக முன்னோக்கி வந்தோம். இந்த மகத்தான ஈதுல் பித்ர் பெருநாள் தினத்தன்று அந்த சகோதரத்துவத்தின் கரங்கள் எதிர்காலத்தில் வலுப்பெற வேண்டும் என்று நான் மனப்பூர்வமாக பிரார்த்திக்கிறேன். அதன் மூலம் வங்குரோத்தாகி உள்ள நமது நாட்டை உலகின் நம்பர் 1 நாடாக மாற்றத் தேவையான பலத்தை பெற எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இலங்கையர்கள் போலவே உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கும் அமைதியான, நல்லிணக்கம் கொண்ட சகோதரத்துவம் வாய்ந்த ஈதுல் பித்ர் பெருநாளாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.















சந்திரிகாவை கட்சியின் தலைவராக நியமிப்பதற்கு மைத்திரியின் எதிரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஒரு காலத்தில் சந்திரிகாவின் அதி விசுவாசியாக இருந்தவர் மைத்திரி.அந்த

# சந்திரிக்காவிடம் செல்லுமா சுதந்திர கட்சி?

இந்த வருடம் தேர்தல் வருடமாக இருப்பதால் –ஜனாதிபதி தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ முதலில் இடம்பெறக்கூடும் என்ற நிலை இருப்பதால் அரசியல் தளம் சூடாகத் தொடங்கியுள்ளது. அரசியல் கட்சிகள் இப்போதே பிரசார பணிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

இதனையொட்டி பல சுவாரசியமான–சூடான–பரபரப்பான சம்பவங்களும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

அப்படியான ஒன்றுதான் சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் விவகாரமும்.

இலங்கையின் ஜனாதிபதிகளில் கிறுக்குத்தனமாக முடிவெடுக்கின்ற ஒரு ஜனாதிபதியாக இருந்தவர் மைத்திரிபால சிறிசேனதான்.அவர் ஜனாதிபதி பதவியில் இல்லாத நிலையிலும்கூட அதையே செய்கிறார்.

நல்லாட்சியின்போது ரணிலும் மைத்திரியும் இணைந்து ஆரம்பத்தில் நன்றாகவே ஆட்சி செய்யத் தொடங்கினர்.

பின்னர் இருவருக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்படத் தொடங்கியதும் ரணிலுக்கு எதிராக சில கிறுக்குத்தனமான வேலைகளில் இறங்கத் தொடங்கினார்.

அதில் முக்கியமானதுதான் யாருமே எதிர்பார்த்திராத தருணத்தில் ரணிலை பிரதமர் பதவியில் இருந்து தூக்கிவிட்டு மஹிந்தவை பிரதமராக நியமித்தமை.

அப்போது கீரியும் பாம்புமாக இருந்த மஹிந்தவும் மைத்திரியும் ஒன்றுசேருவார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

மைத்திரி ஜனாதிபதியானதும் மஹிந்தவிடம் இருந்து சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமைத்துவப் பதவியைக்கூட பறித்திருந்தார்.இதனால் இருவருக்கும் இடையிலான விரிசல் மேலும் அதிகரித்தது.இதனால் அவர்கள் இணைவதென்பது சாத்தியமற்றதாகவே இருந்தது.

ஆனால்,ரணிலுடன் முரண்பட்டுக்கொண்டதால் –அவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்காக யாருடனும் கூட்டுச் சேர்வார் என்று யாரும் நம்பவில்லை.

அப்படி யாரும் எதிர்பார்த்திராத தருணத்தில்தான் ரணிலை நீக்கிவிட்டு மஹிந்தவைப் பிரதமராக்கினார். அவர் எடுத்த அந்த முடிவு அவருக்கு அவப்பெயரையே பெற்றுக்கொடுத்தது.

அதன்பின் அவர் மொட்டு கட்சியுடன் இணைந்து 2020 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோதும் அவருக்கு அந்தக் கட்சிக்குள் மதிப்புக் கிடைக்கவில்லை.

இதனைத் தொடர்ந்தும் அவரது செயற்பாடுகள் எந்தவொரு முன் அறிவித்தாலும் இல்லாத–சற்றுகூட ஊகிக்க முடியாத கிறுக்குத்தனமாகவே இருந்தன.

அதில் ஒன்றுதான் அவர் தயாசிறி ஜயசேகரவை சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளர் பதவியில் இருந்து நீக்கியமை. அதுவும் அவருக்கு நல்ல பெயரை ஈட்டிக்கொடுக்கவில்லை.





**மைத்திரி ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மஹிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்ததன் காரணமாக சந்திரிகா – மைத்திரி உறவு துண்டானது. மைத்திரி சந்திரிக்காமீது வைத்திருந்த விசுவாசம் எல்லாம் வேஷம் என்றானது.**

அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மீண்டும் அவரை அழைத்து பிரதி சிரேஷ்ட உப தலைவர் பதவி தருகிறேன் என்று கூறினார்.தயாசிறி அதை ஏற்கவில்லை.

அதனைத் தொடர்ந்து துமிந்த திஸாநாயக்க,லசந்த அழகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரையும் அவர்கள் வகித்து வந்த கட்சி பதவிகளில் இருந்து நீக்கினார்.

அவர்கள் நீதிமன்றம் சென்றனர்.இப்போது மைத்திரி கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு நீதிமன்றம் இடைக்கால தடை ஒன்றை விதித்துள்ளது.

மைத்திரியை முற்றாக நீக்கிவிட்டு சந்திரிகாவை கட்சியின் தலைவராக நியமிப்பதற்கு மைத்திரியின் எதிரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஒரு காலத்தில் சந்திரிகாவின் அதி விசுவாசியாக இருந்தவர் மைத்திரி.அந்த நம்பிக்கையின் காரணமாகவே 2015 ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக மைத்திரியை இறக்கினார் சந்திரிகா.

ஆனால், மைத்திரி ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மஹிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்ததன் காரணமாக சந்திரிகா–மைத்திரி உறவு துண்டானது. மைத்திரி சந்திரிக்காமீது வைத்திருந்த விசுவாசம் எல்லாம் வேஷம் என்றானது.

மைத்திரியை சு.க தலைமை பதவியில் இருந்து நீக்குவதற்கு அன்றிலிருந்தே முடிவெடுத்துவிட்டார் சந்திரிக்கா.மைத்திரியின் பலவீனத்தை–கிறுக்குத்தத்தனத்தை பயன்படுத்தி மைத்திரியை வீழ்த்துவதற்கு சந்தர்ப்பம் பார்த்து காத்திருந்தார் சந்திரிகா.

சந்திரிகாவின் விசுவாசிகள் சு.கவுக்குள் அதிகம்.அதனால்தான் அண்மைக்காலமாக சந்திரிக்காவை கட்சிக்குள் எடுக்க வேண்டும் என்ற கோசம் கட்சிக்குள் முன்வைக்கப்பட்டுக்கொண்டு வருகிறது.

இந்த நிலையில்தான்,அவர் பார்த்த வேலையின் காரணமாக அவரை கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு நீதிமன்றம் தற்காலிக தடையை விதித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சந்திரிக்காவை தலைவராக்குவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன.


சந்திரிக்கா வியூகம் வகுப்பதில் கெட்டிக்காரி.தனக்கு அநீதி செய்த மஹிந்தவை 2015 இல் சமயம் பார்த்துக் கவிழ்த்தவர்.

அவசரப்படாமல் – அமைதியாக இருந்து காய் நகர்த்துபவர்.அதே நகர்த்தலைத்தான் மைத்திரிக்கு எதிராகவும் செய்து வந்தார்.

அவரது வியூகம் வெற்றியளிக்குமா? கட்சியை கைப்பற்றுவாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

தொடர் - 02

# ஆட்டம் காணும் மஹிந்தவின் அரசியல் எதிர்காலம்



சின்னத்தம்பி குருபரன்

1956, 1978, 1983 கலவரங்கள், பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம், வட்டமேசை மாநாடுகள், பண்டா–செல்வா ஒப்பந்தம், டட்லி –செல்வா ஒப்பந்தம், திம்புப் பேச்சுவார்த்தை, இலங்கை–இந்திய ஒப்பந்தம், ஒஸ்லோ பேச்சு வார்த்தை, 13 ஆவது திருத்தச்சட்டம் ஆகிய யாவும் தமிழ் சிறுபான்மையினரோடு சம்பந்தப்பட்டன என்பதனை மறந்து "முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது" போலான கருத்தாகவே அமைந்திருந்தன.

அது அவரின் பிற்போக்குச் சிந்தனையையும் அவருடைய வாழ்கையில் இத்தகைய கொள்ளையைத்தான் கடைப்பிடித்து வந்திருந்தார் என்பதையும் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தின. இத்தகைய ஒருவரிடம் சிறுபான்மையினர் நலன், தேசியம், தனித்துவம், சுயநிர்ணய உரிமைகள் என்பவற்றை எதிர்பார்ப்பது குதிரைக்கொம்பாக அமையும்.

2005 இல் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதில் இருந்து மறைத்து வைத்திருந்த சிறுபான்மையினருக்கு எதிரான மறுமுகத்தைச் சாதுரியமாகப் படிப்படியாக வெளிக்காட்டிச் சிறந்த நடிகனாகவும் தன்னை இனங்காட்டிக் கொண்டார் என்பதே உண்மை.

அவரைப்பற்றிப் பூரணமாக ஆய்வு செய்யும் ஒருவருக்கு இந்த உண்மை புலப்படும்.இத்தகையவர் 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னரான உள்ளூராட்சி, மாகாணசபை பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்கள் யாவற்றிலும் யுத்தவெற்றி, புலிப்பூச்சாண்டி ஆகியவற்றைக் காரணங்காட்டி வாக்கு வங்கியை நிரப்பி வெற்றிவாகை சூடி வந்தார்.

இதற்குச் சிங்களப் பேரினவாதிகளும் பௌத்த மகா சங்கத்தினரும் ஒத்து ஊதி அவருக்குப் பக்கபலமாக அமைந்தனர். இதில் வங்குரோத்து, வியாபார அரசியல் நடாத்திய சில முஸ்லிம், மலையக அரசியல்வாதிகள், சில வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடத்தக்கவர்கள்.

போதாக்குறைக்குக் குறிப்பிட்ட சில காலம் மக்கள் விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாத அரசியல் பேசுபவர்களையும் இணைத்துக்கொண்டு தமது கருத்தைப் பலப்படுத்தி வந்தார்.

சுதந்திர தினம், யுத்த வெற்றிக் கொண்டாட்டங்கள், தேசத்திற்கு மகுடம் கண்காட்சி, பொது வைபவங்கள் என்பனவற்றில் யுத்தவெற்றியும், இனவாதமும் பாடுபொருளாக மாறின.

2007 ஆம் ஆண்டு இவரின் சந்தர்ப்பவாத அரசியலை விளங்கிக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணி, பொது சன முன்னணியோடு இருந்த கூட்டை முறித்துக்கொண்டதில் இருந்து மக்கள் விடுதலை முன்னணிக்குள் பிளவை ஏற்படுத்திக் கட்சியை ஆட்டங்கான வைத்தார்.

அது மாத்திரமன்றி ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி அக்கட்சியில் இருந்து முப்பதுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

அதேபோல் இலங்கை முஸ்லிம் காங்கிரஸை உடைத்துப் பல கட்சிகளை உருவாக்கித் தன்னுடன் இணைத்துக்கொண்டார். தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பியசேனாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டார்.

இவ்வாறு ஏனைய கட்சிகளைப் பிளவுபடுத்தி உறுப்பினர்களை சேர்த்துக்கொண்டு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை உறுதிப்படுத்தித் தமக்குத் தேவையான சட்டமூலங்களை இயற்றியும் திருத்தியும் மாற்றிக்கொண்டார்.

அரசியல் அமைப்பின் 18 ஆவது யாப்புத் திருத்தம், 19 ஆவது திருத்தம், திவிநெகும எனப் பல சட்ட மூலகங்களைத் தமக்குச் சாதகமாக உருவாக்கிளார். இவற்றுள் பல திருத்தங்கள் சிறுபான்மையினருக்குப் பாதகமானவை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தாம் கூறிய வாக்குறுதிகளைப் பெரும்பாலும் நிறைவேற்றாதவராகவே காணப்பட்டார். இந்த விடயத்திலும் ஒரு நடிகனாகவே செயற்பட்டார்.

இந்தியாவில் வைத்து அளித்த வாக்குறுதிகள், அமெரிக்காபோன்ற மேலைத்தேய நாடுகளுக்கு அளித்த வாக்குறுதிகள் சிறுபான்மை மக்களின் கட்சிப் பிரதிநிதிகள், வட மாகாண அரசு (ஆளுனர், பிரதம செயலாளர்) அகதிகளை மீளக்குடியமர்த்தல், காணிச் சுவிகரிப்பு, அதி உயர் பாதுகாப்பு வலயம், இராணுவக் குறைப்பு போன்ற விடயங்கள் தொடர்பான வாக்குறுதிகள் பெரும்பாலும் நிறைவேற்றப்படவில்லை.

உதாரணமாக இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் பதின்மூன்று பிளஸ்பற்றிக் கூறிய மறுவாரமே வாக்குறுதி புஸ்வாணமாகியது. இதுபோல் பலவற்றைக் கூறலாம்.

ஜாதிக ஹெல உறுமய 2014 ஆண்டு பிற்பகுதியில் மகிஹிந்தவுடனான உறவை முறித்துக்கொள்ளும்வரை சிறுபான்மையினர் தொடர்பாகத் துவேசம் பேசி வந்நதனர்.

2014இல் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பேச்சு தொடங்கும்வரை பொது பல சேனா ராஜபக்ஷ குடும்பத்தினரின் பாதுகாப்பில் இருந்துகொண்டு அடாவடித்தனங்கள் செய்து வந்தனர்.

அதன் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர், தான் ஒரு பௌத்த துறவி என்பதையும் மறந்து ஒரு ரவுடி போல் செயற்பட்டதை யாவரும் அறிந்திருப்பார்கள். அவர்களின் அட்டகாசம் தொடர்பாகப் மஹிந்தவிடமும் கோட்டாபயவிடமும் பலர் முறையிட்டபோதும் அவை எதனையும் கவனத்தில் கொள்ளவில்லை.

பல இந்து ஆலயங்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியன கொள்ளையிடப்பட்டு இடித்து அழிக்கப்பட்டபோதும், சிறுபான்மை மக்கள் தாக்கப்பட்டபோதும், பேருவளை, அளுத்கம, தர்ஹாநகர் ஆகிய இடங்களில் திட்மிட்டு இனக்கலவரம் ஏற்படுத்தப்பட்டுப் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டுச் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டபோதும், பொது பல சேனாவின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் முஸ்லிம் அமைச்சர் ஒருவரின் அலுவலகத்திற்குச் சென்று அட்டகாசம் செய்தபோதும் மிதவாதம், சம உரிமைபற்றிப் பேசிய தேரர் ஒருவர் தாக்கப்பட்டபோதும், பல ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடாத்தப்பட்டபோதும், சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டபோதும் கண்டும் காணாததுபோல் மஹிந்த செயற்பட்டார்.



பல இந்து ஆலயங்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியன கொள்ளையிடப்பட்டு இடித்து அழிக்கப்பட்டபோதும், சிறுபான்மை மக்கள் தாக்கப்பட்டபோதும், பேருவளை, அளுத்கம, தர்ஹாநகர் ஆகிய இடங்களில் திட்மிட்டு இனக்கலவரம் ஏற்படுத்தப்பட்டுப் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டுச் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டபோதும், பொது பல சேனாவின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் முஸ்லிம் அமைச்சர் ஒருவரின் அலுவலகத்திற்குச் சென்று அட்டகாசம் செய்தபோதும் மிதவாதம், சம உரிமைபற்றிப் பேசிய தேரர் ஒருவர் தாக்கப்பட்டபோதும், பல ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடாத்தப்பட்டபோதும், சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டபோதும் கண்டும் காணாததுபோல் மஹிந்த செயற்பட்டார்.

இவ்வேளையில் பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் செய்வதறியாது திகைத்து நின்றனர். சில வேலைகளில் பொலிஸ/ம் தாக்கப்பட்டனர்.

பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு எந்த ஒரு பதில் நடவடிக்கையும் எடுக்கப்படாது மௌனம் சாதித்தனர்.

இத்தனையும் மாற்றமொன்று நிகழும் அதில் தோல்வியடைவோம் என்பதை உணராது செயற்பட்டமையின் விளைவுதான் 2015 ஜனாதிபதித் தேர்தலின் தோல்வியடையக் காரணமாக அமைந்தன.



(தொடரும்)

# HNBஇன் பண்டிகைக்கால சேமிப்பு: Happy புத்தாண்டு சலுகைகள்





இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, அதன் பெறுமதியான டெபிட் மற்றும் கிரெடிட் கார்ட் உரிமையாளர்களுக்கான தவிர்க்க முடியாத கழிவுகள் மற்றும் ஒப்பந்தங்களின் வரிசையுடன், வரவிருக்கும் புத்தாண்டு கொண்டாட்டத்தை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

HNB இலங்கையின் முன்னணி வர்த்தக நிலையங்கள், பேஷன் கடைகள், நகைகள் மற்றும் இ-காமர்ஸ் பிராண்டுகள் மற்றும் 300 க்கும் மேற்பட்ட பிரபலமான உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் ஹோட்டல்களுடன் டெபிட் மற்றும் கிரெடிட் கார்டுதாரர்களுக்கு 30 ஏப்ரல் 2024 வரை இணையற்ற நன்மைகளை வழங்குவதற்காக கூட்டு சேர்ந்துள்ளது.

“நாங்கள் புத்தாண்டு பண்டிகைக் காலத்திற்கு உற்சாகமாக காலடி எடுத்து வைக்கும் போது, நாடு முழுவதிலும் உள்ள வணிகர்களின் விரிவான வலையமைப்புடன் உடே பங்காளியாகி, எங்களின் அன்பான கார்ட் அட்டைதாரர்களுக்கு இணையற்ற சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது.

இந்த ஆண்டு, மளிகை சாமான்கள் மற்றும் தினசரி அத்தியாவசிய பொருட்கள் முதல் உயர்தர எலக்ட்ரோனிக்ஸ் மற்றும் ஆடம்பரமான உணவு அனுபவங்கள் வரை பலவிதமான தேவைகள் மற்றும் விருப்பங்களை உள்ளடக்கிய வகையில் எங்கள் சலுகைகளை நாங்கள் உன்னிப்பாகக் கண்டறிந்துள்ளோம். என HNB கார்ட் பிரிவின் பிரதானி கௌதமி நிரஞ்சன் தெரிவித்தார்.




## தேசிய வியாபார அறிமுகம் 2024

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், அதன் தேசிய வியாபார அறிமுகம் 2024 நிகழ்வை கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது. ”Unstoppable Together” எனும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு, நிறுவனத்தின் திரண்ட நோக்கு மற்றும் ஒருமைப்பாட்டுக்கான எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது.

நிறுவனத்தின் வளர்ச்சிக்காக சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தி செயலாற்றியிருந்த ஆலோசகர்கள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டிருந்தனர்

பெறுமதி வாய்ந்த காப்புறுதிதாரர்களுக்கு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் அவர்களின் திறன்கள் மற்றும் ஒப்பற்ற அர்ப்பணிப்பு போன்றவற்றை கௌரவித்திருந்ததுடன், வெற்றிகரமான செயற்பாட்டின் பிரதான தூண்களாக இந்த நபர்களையும், முகவர் விநியோக பிரிவையும் கொண்டாடியிருந்தது.

இந்த ஆண்டின் முற்பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்த Fast Starter போட்டியில் சிறப்பாக செயலாற்றியிருந்த 170க்கும் அதிகமான ஆலோசகர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது.

## Q4 2023 சமூக வழிகாட்டுதல்கள் அமுலாக்க அறிக்கையை வெளியிடும் TikTok

பாதுகாப்பான மற்றும் நேர்மறையான Online சூழலை வளர்ப்பதற்கான அதன் தொடர்ச்சியான முயற்சியில், TikTok 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டிற்கான அதன் சமூக வழிகாட்டுதல்கள் (Community Guidelines) அமுலாக்க அறிக்கையை வெளியிட்டது.

இந்த வெளியீடானது வுமைவுழம இன் வெளிப்படைத்தன்மை, பாதுகாப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றில் நிலையான உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது, மேலும் நம்பிக்கையை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது மற்றும் அதன் உலகளாவிய சமூகத்திற்கு பாதுகாப்பான தளத்தை உறுதி செய்கிறது.

2023 ஆம் ஆண்டின் அக்டோபர்-டிசம்பர் காலப்பகுதியில், TikTok இன் செயலூக்கமான நடவடிக்கைகள் உலகளவில் 176,461,963 வீடியோக்களை அகற்ற வழிவகுத்தது.

இது பிளாட்ஃபார்மில் பதிவேற்றப்பட்ட அனைத்து வீடியோக்களிலும் சுமார் 1.0மூ ஆகும். இவற்றில் கணிசமான பகுதி, 128,300,584 வீடியோக்கள், தானியங்கு கண்டறிதல் தொழில்நுட்பங்கள் மூலம் அடையாளம் காணப்பட்டு அகற்றப்பட்டன, அதே நேரத்தில் 8,038,106 வீடியோக்கள் மேலும் மதிப்பாய்வு செய்தபின் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டன.

# LG Mighty Washers சலவை இயந்திரம் அறிமுகம்




உலகின் முன்னணி இலத்திரனியல் மற்றும் வீட்டுப்பாவனை மின் உபகரண விற்பனை நாமமாக திகழும் LG தனது புதிய அறிமுகமான LG ஆடைாவல றுயளாநசள சலவை இயந்திர அணிவகுப்பை சந்தைகளுக்கு அறிமுகம் செய்துள்ளது.

LG சலவை இயந்திரங்கள் ஒவ்வொரு சலவைக்கும் புதிய புத்துணர்வை வழங்கி ஸ்மார்ட் தொழில்நுட்பத்தில் துரித சலவையை மிகவும் இலகுவாக வழங்குகிறது.

LG சலவை இயந்திரங்களின் சிறப்பம்சம் யாதெனில், உங்களது பிஸியான வாழ்வுக்கு ஏற்ற வகையில் அதிக கொள்ளளவிலான சலவையை மிகவும் இலகுவாக வழங்குகிறது.

11kg,13kg, 15kg மற்றும் 21kg போன்ற மிகப்பெரிய கொள்ளளவுகளில் சலவை இயந்திரங்கள் கிடைப்பதால், ஏனைய சாதாரண கொள்ளளவுகளைக் கொண்ட சலவை இயந்திரங்களை போல் அடிக்கடி சலவை செய்யத் தேவையில்லை. ஒரு வாரத்திற்கு தேவையான ஆடைகளை ஒரே தடவையில் சலவை செய்யும் திறன் இதில் உள்ளது.

இந்த சலவை இயந்திரங்கள் தண்ணீர் மற்றும் மின்சாரத்தை அதிகபட்சமாக சேமிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணத்தை குறைத்து சுற்றுச்சூழல் நட்பு செயல்பாட்டிற்கு மிகவும் உறுதுணையாக அமைகிறது.

# DIMO Academyஇன் 32ஆவது பட்டமளிப்பு விழா




DIMO நிறுவனத்தின் கல்விப் பிரிவான DIMO Academy, அண்மையில் அதன் 32ஆவது பட்டமளிப்பு விழாவை நடாத்தியிருந்தது.

இதில் German Automobile Mechatronics டிப்ளோமா மற்றும்; Automobile Mechatronics சான்றிதழ் பாடநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த 50 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது திறமைகளை வெளிப்படுத்திய, D.G. கசுன் இந்துஜ விக்ரமரத்ன, U.L.D. சமத் மிலிந்த குணசிங்க, சியம்பலாபிட்டியகே இஷான் பியத்ரோ சில்வா ஆகியோர் இப்பட்டமளிப்பு விழாவில் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்களை வென்றனர்.

இவ்வருடம் டிப்ளோமா பட்டம் பெற்ற சிலர், தங்களுடைய பட்டமளிப்பு விழாவிற்கு முன்னதாக 4 புகழ்பெற்ற ஜேர்மன் நிறுவனங்களில் வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொண்டமை இங்கு விசேட அம்சமாகும்.

DIMO Academy ஆனது, வாகனத் துறையுடன் ஏற்படுத்தியுள்ள ஒத்துழைப்பையும் தொழில்துறையில் தொடர்ச்சியாக மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திறமையான பணியாளர்களை உருவாக்குவதற்கான அவர்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் இது பிரதிபலிக்கிறது.




# யூனியன் அஷ்யூரன்ஸ் கௌரவிப்பு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி தீர்வுகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், 7ஆவது வருடாந்த காப்புறுதி கௌரவிப்பு (7th Annual Insurance Conclave Awards) விருதுகள் வழங்கும் நிகழ்வில் ஆசியாவின் அதிகளவு முன்நோக்கிய சிந்தனை கொண்ட ஆயுள் காப்புறுதி வர்த்தக நாமம் 2023 (Most Forward-Thinking Life Insurance Brand 2023 - Asia) எனும் விருதை சுவீகரித்திருந்தது.

நியு இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பனி லிமிடெட் (New India Assurance Company Limited) நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, இன்சூரன்ஸ் அலேர்ட்ஸ் (Insurance Alertss) வலுவூட்டியிருந்தது.

தொழிற்துறையின் முன்னோடிகள், புத்தாக்கவியலாளர்கள் மற்றும் துறைசார் பங்காளர்கள் இந்த நிகழ்வில் ஒன்றுகூடியிருந்ததுடன், சர்வதேச மட்டத்தில் காப்புறுதித் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த நிறுவனங்கள் கௌரவிக்கப்பட்டிருந்தன.

ஆயுள் காப்புறுதி கட்டமைப்பில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதிலும், வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடுகளிலும் யூனியன் அஷ்யூரன்ஸ் காண்பிக்கும் முயற்சியை இந்த கௌரவிப்பு வெளிப்படுத்தியுள்ளது.

# நிலக்கரி ஆலையை மூடக்கோரும் இளைஞர் அமைப்பு:





பேண்தகு சக்தி மற்றும் சமூக நலனை ஊக்குவிக்கும் அமைப்பான Sri Lanka Blue Green Alliance, இலங்கையில் புதுப்பிக்கத்தக்க சக்திக்கான முதலீடுகள் குறித்த அவர்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில், இலங்கை தேசிய நூலக கேட்போர் கூடத்தில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடாத்தியிருந்தது.

சராசரியாக, இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 50சூ வரை மசகு எண்ணெய், நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கே செலவிடப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிடுகிறது.

Moody's மற்றும் S&P மூலம் இலங்கைக்கு முறையே வழங்கப்பட்ட "CA" மற்றும் "SD" என குறிக்கப்படும் கடன் மதிப்பீடுகள், நாட்டுக்கு கடன் வழங்குதல் அல்லது முதலீடு செய்வது தொடர்பான கணிசமான அளவிலான அபாயத்தைக் குறிக்கின்றன.

இதன் விளைவாக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும், முதலீட்டிற்கான வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் காலக்கெடுவுடன் கூடிய திட்டங்களுக்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளதுடன், புதுப்பிக்கத்தக்க சக்தி துறையில் முழுமையான தயார்படுத்தல் தேவைப்படுகின்றது.

இவ்வாறான சவாலான சூழ்நிலை இருந்தபோதிலும், இத்தகைய முக்கிய திட்டங்களைக் கையாள்வதில் உலகளாவிய அளவில் கிடைக்கும் விரிவான நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பும் உள்ளது.

குறிப்பாக, அதிக காற்றாலை ஆற்றல் திறன் கொண்ட பகுதியாக அறியப்படும் நாட்டின் வட மேற்குப் பகுதியில், ஏராளமான புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், மின் பிறப்பாக்கத்துக்கான சாத்தியம் அதிகமாகவுள்ளது.

# INSEE இற்கு விருது




INSEE சங்ஸ்தா, 2024 ஆம் ஆண்டிற்கான மக்கள் அபிமானத்தை வென்ற வீடமைப்பு மற்றும் கட்டுமான வர்த்தகநாமமாக மீண்டும் ஒரு தடவை SLIM Kantar ஆல் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த பெருமதிப்புமிக்க பிரிவில் தொடர்ச்சியாக 13வது தடவையாக இந்த வெற்றியை ஈட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சந்தைப்படுத்தல் கற்கை நிலையத்தால் (The Sri Lanka Institute of Marketing - SLIM) வழங்கப்படுகின்ற இவ்விருது, இவ்வர்த்தகநாமத்தின் மீது வாடிக்கையாளர்கள் கொண்டுள்ள விசுவாசம் மற்றும் நம்பிக்கையை பிரதிபலிப்பதுடன், இலங்கையின் #1 சீமெந்து வர்த்தகநாமம் என்ற INSEE சங்ஸ்தாவின் பாரம்பரியத்தையும் பறைசாற்றுகின்றது.

INSEE Cement நிறுவனத்தின் வர்த்தகப் பணிப்பாளர் சஃபீகான் சித்தீக் அவர்கள், இலங்கையின் கட்டுமான தொழிற்துறைக்கு சவால்மிக்க காலங்களிலும் கூட, வர்த்தகநாமத்தின் மீது INSEE வாடிக்கையாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற ஆதரவுக்காக அவர்களுக்கு நன்றிக்கடனைத் தெரிவித்தார்.

# குழந்தைகளுக்கான பாதுகாப்பான இல்லம் நூல் வெளியீடு




இலங்கை சிறுவர் நல மருத்துவக் கல்லூரியுடன் பேபி செரமி இணைந்து உருவாக்கிய, குழந்தைகளுக்கான பாதுகாப்பான இல்லம் எனும் நூலை, ஆரம்ப குழந்தைப் பருவ மேம்பாட்டு செயலக அதிகாரிகளுக்கு அறிமுகப்படுத்தல் மற்றும் தெளிவூட்டுதல் நிகழ்ச்சி அண்மையில் இடம்பெற்றது.

இலங்கையின் முன்னணியில் உள்ள மற்றும் மிகவும் பிரபலமான குழந்தைகளுக்கான வர்த்தக நாமமான பேபி செரமி, குழந்தைகளுக்கு மிகவும் பாதுகாப்பான உலகத்தை உருவாக்குவதில் முன்னணியில் உள்ளது.

இதன் தொடர்ச்சியான பணியில் மேலும் ஒரு படியை முன்னோக்கியதாக, பாதுகாப்பான உலகத்தை கட்டியெழுப்புவதற்காக, சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் உள்ள ஆரம்ப குழந்தைப் பருவ மேம்பாட்டு செயலக அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் நிகழ்ச்சியை, இலங்கை சிறுவர் நலன் மருத்துவக் கல்லூரி மற்றும் பேபி செரமி இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

செத்சிறிபாய நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பேபி செரமி மற்றும் இலங்கை குழந்தைகள் நல மருத்துவக் கல்லூரி இணைந்து, வீட்டில் குழந்தைகளுக்கு இடம்பெறும் விபத்துகளைத் தடுப்பது குறித்து வெளியிட்ட வழிகாட்டல் நூல் வெளியிடப்பட்டது.

# வனிதா வாசனாவின் விசேட சலுகைகள்




குடும்பம், சமூகம் மற்றும் தாய்நாட்டின் எதிர்காலத்திற்காக தொடர்ந்தும் தமது உழைப்பை தியாகம் செய்யும் இலங்கைப் பெண்களின் விலைமதிப்பற்ற பணிகளுக்கு கௌரவம் செலுத்தும் வகையில் மார்ச் 08 ஆம் திகதி மக்கள் வங்கி சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடியது.வனிதா வாசனாவின் கணக்கிற்கு பல சலுகைகளையும் அறிமுகம் செய்தது.

மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் (தனிநபர் வங்கிச்சேவை) தம்மிகா தசநாயக்க அவர்கள் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் –

மக்கள் வங்கியானது 1993 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து பெண்களுக்கான வனிதா வாசனா சேமிப்புக் கணக்கை அறிமுகப்படுத்தியது. வனிதா வாசனா கணக்கு இலங்கையில் வர்த்தக வங்கியொன்றால் விசேடமாக பெண்களுக்காக அறிமுகப் படுத்தப்பட்ட முதலாவது கணக்காகும்.



அன்று முதல் வனிதா வாசனா மூலமாக சேமிப்பை ஊக்குவித்து பல்வேறு கடன் வசதிகளை வழங்கி மக்கள் வங்கி நாட்டின் பெண்களை உயர்த்தி அதன் மூலம் குடும்ப பொருளாதாரத்தை உயர்த்தி பெண்கள் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான பங்களிப்பை அளித்து வருகிறது.

இவ்வருடம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கி வனிதா வாசனா கணக்கிலிருந்து பல விசேட சலுகைகளை “உலகத்தை வென்ற பெருமைக்குரிய பெண்“ என்ற தொனிப்பொருளில் வழங்க மக்கள் வங்கி தயாராகி வருகின்றது.



வாசகர்களுக்கு இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

- ஈத் முபாரக் -

வாசகர்களுக்கு சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்





# நோன்புத் திருநாளின் பெருமைகள்

"ஈத்" என்னும் அரபுச் சொல்லுக்கு கொண்டாட்டம் அல்லது பெருநாள் என்பது பொருளாகும். ஈகைத் திருநாள் என்பது இஸ்லாமியர்களின் இருபெரும் திருநாட்களில் ஒன்று.

இஸ்லாமியார்கள் தங்களது புனித மாதமாகிய ரமலான் முழுவதும் நோன்பு நோற்று முடித்ததை அடுத்து இது கொண்டாடப்படுகின்றது. ரமலான் பெருநாள் அல்லது நோன்புப் பெருநாள் என்றும் இது அழைக்கப்படுகின்றது.

ஐவகை கடமைகள் இஸ்லாமியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயக் கடமைகள் ஐந்து உண்டு. இதில் ஒன்றைத் தவிர்த்துக் கொண்டாலும், அவர் இஸ்லாமியராக முடியாது.

விசுவாசப் பிரகடணம் (கலிமா), தொழுகை(ஐந்து நேரம் வணங்குவது), ஏழை வரி(ஸ ாகத்) , நோன்பு(ரமலான் மாதம் முழுவதும்), புனித கவுபாவில் குறிப்பிட்ட கால எல்லையில் வணங்குதல் (ஹஜ்) என்பனவே இவை.

அந்த வகையில் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றான நோன்பை நிறைவேற்றிய பின் கொண்டாடும் ஒரு புனித நாள்தான் ஈகைத் திருநாள்.

இறைதூதர் அளித்த நாள் முகம்மது நபி அவர்கள் மதீனா நகர் வந்தபோது மதீனா வாசிகள் இரு நாட்களை பெரும் திருவிழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அதற்கான காரணங்களை கேட்டபோது, பண்டைய காலம் தொட்டு விளையாடுவதற்காகவும். பொழுது போக்கிற்காகவும் இவ்வாறு கொண்டாடி மகிழ்வது வழக்கம் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

அப்போது முகம்மது நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ் அவ்விரண்டு திருவிழாக்களுக்கும் பதிலாக சிறந்த திருநாட்களை பதிலாக வழங்கியுள்ளார். அவை குர்பானி வழங்கும் தியாகத் திருநாள்!, மற்றொன்று ஈந்து உவக்கும் ஈகைப் பெருநாள்! என்று அறிவித்தார்கள்.

நோன்பின் மகிமை ஒன்றும் இல்லாமல் பட்டினி கிடப்பது வேறு. பசியின் கொடுமையை உணரவேண்டும் என்பதற்காகவும், அகந்தை, ஆணவத்தை ஒடுக்கி சிறந்த மனிதராக உயரவேண்டும் என்பதற்காகவுமே ஒருமாத காலம் பசியோடு நோன்பிருக்கின்றனர் இஸ்லாமியர்கள்.

இது ஒவ்வொரு இஸ்லாமியரின் தலையாய கடமை என்று திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரமலான் மாதம் முழுவதும் இறைவனுக்காக நோன்பு நோற்றபின் ஷவ்வால் மாதம் முதல் பிறை பார்த்தபின்னர் கொண்டாடப்படும் பெருநாளே ஈகைத் திருநாள்.

ஒரு மாதம் முழுவதும் உண்ணாமல் பருகாமல் பசித்திருந்து நோன்பு நோற்றவர்களுக்கு இறைவன் அளிக்கும் பரிசாக இந்த நோன்பு அமைந்துள்ளது.

இஸ்லாமியர்கள் தங்களது நோன்பை ரமலான் மாதத்தின் கடைசி நாளுடன் முடித்துக்கொள்ள வேண்டும் என இறைவனால் வழங்கபட்ட திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது.

தானத்தினால் ஏற்படும் இன்பம் "ஈதல்" என்பது ஒருவகை இன்பமாகும்.இல்லாதவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவுவதால் பெறுபவரும், வழங்குபவரும் ஒரே நேரத்தில் மகிழ்ச்சி கொள்ள வழிகோலும்.

ஈகை கொடுத்தல் பசி தாகத்துடன் நோன்பு வைத்து பின் பெருநாளுக்கு முன் தான தர்மத்தைக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும். அன்று எவரும் பசி பட்டினியுடன் இருக்கக்கூடாது. அன்று நோன்பு வைப்பதும் தடுக்கப்பட்டது என நபி ஸல் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.





## வாசகர்களுக்கு இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

- ஈத் முபாறக் -

## வாசகர்களுக்கு சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்





# புதிய ஆரம்பங்களை தருகின்ற மகிழ்ச்சியான பண்டிகை!

உலகின் பல நாடுகளிலும் தமிழர்கள் இந்த சித்திரைப் புத்தாண்டை விமர்சையாக கொண்டாடி வருவது வழக்கமாகும். ஆரம்ப காலங்களில் இருந்தே வானியல் ஜோதிடம் போன்றவற்றில் சிறந்து விளங்கியதால் தமிழ் ஆண்டு கால ரீதியாக சிறப்பாகக் காணப்படுகின்றது.

இந்தியா மட்டுமின்றி உலகெங்கும் வாழும் தமிழ் மக்களும் சித்திரை புத்தாண்டை கொண்டாடுகிறனர். இனிப்புகள், பட்டாசுகள், விளையாட்டுக்கள் என நண்பர்கள், அயவர்கள், உறவினர்களுடன் மகிழ்ச்சியாக கொண்டாடப்படுகின்றது.

தமிழர்கள் புத்தாண்டிற்கு முதல் நாள் இரவில் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள் வெற்றிலை, பாக்கு, நகைகள், நெல் முதலான மங்கள பொருட்கள் வைத்த தட்டை வழிபாட்டு அறையில் வைத்து அவற்றை அதிகாலையில் காண்பதனை புனிதமாக கருதுகின்றனர்.

புத்தாண்டு அன்று மருத்துநீர் வைத்து அதிகாலையில் நீராடுவர் புத்தாடைகள் அணிந்து ஆலயங்களுக்கு சென்று வழிபடுவார்கள் மற்றும் அன்றைய தினத்தில் பொங்கல் மற்றும் தித்திப்பான சிற்றுண்டிகளை தயாரித்து உறவினரோடு இணைந்து உண்பார்கள் சுபநேரத்தில் கைவிசேடம் வழங்குதல் புத்தாண்டின் சிறப்பம்சமாக உள்ளது.

இத்தினத்தில் இளையவர்கள் மூத்தவர்களிடம் ஆசி பெறுவதும் வழக்கமாக உள்ளது. அத்துடன் இந்த புத்தாண்டு தினத்தில் ஊஞ்சல் கிளித்தட்டு கபடி போன்ற கிராமிய விளையாட்டுக்கள் கோலாகலமாக இடம்பெறுகின்றது.

மற்றும் புதிய முயற்சிகள் மற்றும் தொழில் ஆரம்பித்தல் போன்ற நிகழ்வுகள் இக்காலத்தில் உகந்தவையாக கருதப்படுகின்றது.

இந்த சித்திரை புத்தாண்டானது தமிழகத்தில் மட்டுமன்றி அசாம், மேற்குவங்காளம், கேரளா, தாய்லாந்து, இலங்கை, மலேசியா போன்ற பல்வேறான இடங்களிலும் கொண்டாடப்படுவது சிறப்பான விடயமாகும்.

சித்திரை புத்தாண்டானது வாழ்வில் பல புதிய ஆரம்பங்களை தருகின்ற ஒரு மகிழ்ச்சியான பண்டிகையாக தமிழ்ரகளால் கொண்டாடப்படுகின்ற சிறப்புடையதாகும்.









வாசகர்களுக்கு இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்
- ஈத் முபாரக் -

வாசகர்களுக்கு சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்






# மகிழ்ச்சி பொங்கும் நோன்புப் பெருநாள்

வணக்க வழிபாட்டில் மட்டுமல்ல., வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் குர்ஆனையும் ஹதீஸையும் பின்பற்றுவதுதான் இஸ்லாம் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்தவகையில் பெருநாளை முன்னிட்டு குர்ஆன் - ஹதீஸின் வழிகாட்டல் என்ன என்பதைப் பார்ப்போம்.

“தக்பீர்“ சூரியன் மறைந்து பெருநாள் இரவு தொடங்கியதிலிருந்து பெருநாள் தொழுகை வரையில் தக்பீர் சொல்ல வேண்டும்.

குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

(நோன்பு மாதத்தின் எண்ணிக்கையை) நீங்கள் பூர்த்தி செய்வதற்காகவும் - அல்லாஹ் உங்களை நேரிய வழியில் செலுத்தியதற்காக அவனது மேன்மையை நீங்கள் போற்றுவதற்காகவுமே (இவ்வழி உங்களுக்குக் காண்பிக்கப்படுகிறது) (2:185)

பள்ளிவாசலில் மட்டுமல்ல கடைவீதிகளிலும் வீடுகளிலும் குரலுயர்த்தி தக்பீர் முழங்கிட வேண்டும். இதன் நோக்கம், இஸ்லாத்தின் வணக்க வழிபாட்டின் சிறப்பைப் பிரகடனப்படுத்துவதும் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது பெருமையைப் பறைசாற்றுவதும் அவனுக்கு நன்றி செலுத்துவதுமாகும்! பெருநாள் தொழுகையை மைதானத்தில் நிறைவேற்றுவதே நபிவழியாகும்.

ஸகாத்துல் ஃபித்ர் எனும் பெருநாள் தர்மத்தை, பெருநாள் பகல் - இரவு செலனீனங்கள்போக பணம் மீதமுள்ள அனைத்து முஸ்லிகளும் வழங்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது. இதன் நோக்கம், நோன்புக் காலங்களில் வீணான சொல் - செயல்கள் ஏதேனும் நிகழ்ந்திருந்தால் அவற்றிலிருந்து நோன்பாளியைத் தூய்மைப்படுத்துவதாகும். ஏயைஎளிய மக்களுக்கு உணவளித்து அவர்களின் பசியைப் போக்கி இந்தாளில் எல்லோரும் மகிழ்ந்திருக்க வேண்டும் என்பதும் இதன் உயரிய நோக்கங்களில் ஒன்றாகும். பெருநாள் அன்று தொழுகைக்கு முன்னர் இந்தத் தர்மம் வழங்கிட வேண்டும். அதற்கு ஓரிரு நாட்கள் முன்பே வழங்கினாலும் கூடும்.

குளிப்பது, நறுமணம் பூசுவது என்பனபெருநாள் அன்று மேற்கொள்ளப்படும் நபிவழிமுறைகளாகும். - ஸ ாயிப் பின் யஸீத், ஸயீத் பின் ஜு/பைர் (ரலி) இருவரிடமிருந்தும் ஆதாரபூர்வமாய் அறிவிக்கப்பட்டுள்ளது. பெருநாள் அன்று மூன்று காரியங்களை மேற்கொள்வது நபிவழியாகும். 1) குளிப்பது 2) தொழுகைக்குப் போகும் முன்பு உண்பது 3) தொழுகைக்கு நடந்து செல்வது.

அழகிய ஆடைகளை அணிவதும் ஒரு முக்கிய சுன்னாவாகும்.

ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார்கள் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு ஜு/ப்பா இருந்தது அதனை - இரு பெருநாட்களிலும் ஜு/ம்ஆ நாளிலும் அணிவார்கள். (நூல்: இப்னு /ஹஸைமா)

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் பெருநாள் அன்று மிகவும் அழகிய ஆடையைத் தேர்வு செய்து அணிவார்கள்,, - இது ஆண்களுக்குத்தானே தவிர பெண்களுக்கு அல்ல. பெண்கள் அலங்காரத்தைத் தவிர்த்திட வேண்டும். ஏனெனில் உடலையும் ஆடை அலங்காரத்தையும் மறைத்துக் கொள்ளுமாறு அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது.

இதேபோல அந்நிய ஆடவர்களைக் கவர்ந்திடும் வகையில் நறுமணம் பூசுவதும் அவர்களின் முன்னர் தோற்றம் அளிப்பதும் பெண்களுக்கு விலக்கப்பட்டுள்ளது.

அவர்கள் வணக்க வழிபாட்டிற்காகப் புறப்பட்டிருப்பது உண்மையெனில் அல்லாஹ் - ரசூலின் கட்டளையைப் பேணுவது கடமையாகும்.

தொழுகைக்குச் செல்லும் முன்பு பேரீத்தம் பழங்களை ஒற்றைப்படையாக உண்பது நபிவழியாகும்.“தொழுகை நடைபெறும் மைதானத்திற்கு நடந்தே செல்வது அவசியம். தேவை இருப்பின் வாகனத்தைப் பயன்படுத்தலாம். - வீட்டில் இருந்து வெளிக்கிளம்பியது முதல் தொழுகையை நிறைவேற்றும் வரை தக்பீர் சொல்லிட வேண்டும் என்பதை மறந்துவிட கூடாது.

“பெருநாள் தொழுகை வாஜிப் எனும் கடமையானதாகப் பாரக்கப்படுகின்றது. இப்னு தைமிய்யா (ரஹ்) போன்ற ஆய்வாளர்களின் கருத்து இதுவே ஆகும். தக்க காரணம் இருந்தால் மட்டுமே தவிர அதை விடுவதற்கு அனுமதி இல்லை. இதேபோல் தொழுகைக்குப் பிறகு நிகழ்த்தப்படும் உரையைச் செவிமடுப்பதும் அவசியமாகும்.

இந்த அசாதாரன சூழ்நிலையிலும் நோன்பு நோற்கவும் பெருநாள் கொண்டாடவும் அல்லாஹ் நமக்குப் பெரும்பாக்கியம் அருளியதற்காக அவனுக்கு நன்றி செலுத்தும் உணர்வுடன் இருங்கள்.

அதற்கேற்ப உங்கள் செயல்களை அமைத்துக்கொள்ளுங்கள். நன்மைகள் - நற்காரியங்கள் ஆற்றுவதில் ஆர்வம் கொள்ளுங்கள். பந்த இணைப்பு உறவுகளைப் பேனல் போன்ற பயன்மிக்கச் செயல்களை மேற்கொள்வதற்கு இதுவே உகந்த காலம் என்பதை மறவாதீர்கள். பரஸ்பரம் கோபம், சண்டை சச்சரவு, பொறாமை ஆகியவற்றை விட்டொழியுங்கள். இத்தகைய இழிகுணங்களிலிருந்து உள்ளத்தைத் தூய்மைப் படுத்துங்கள்.

இந்த உன்னத நாளில் ஏழை, எளியோர், அநாதைகள் ஆகியோர் மீது கருணை பொழியுங்கள். இந்தப் புனித ரமளான் நோன்புப் பெருநாளில் அவர்களின் வாழ்வில் மகிழ்வு பொங்கிட வழங்கி உதவுங்கள். துணைநில்லுங்கள், ஆயுள் முழுவதும் நலமுடன் வாழந்திட - இஸ்லாமிய உணர்வுடன் வாழ்ந்திட - வளம் அனைத்தும் பெற்றிட திடசங்கற்பம் பூணுவோமாக.


RAK - SRI LANKA
வியாபார அமர்வு மற்றும் வர்த்தக கண்காட்சி 2023
www.rak-srilankatradefair.com

உங்களது வியாபாரத்தை உலகமயமாக்குங்கள்

முதல் முறையாக RAK - இலங்கை வியாபார கண்காட்சி
விநியோகஸ்தர்கள், பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டாளர்களின்
தயாரிப்புகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்த
திட்டமிடப்பட்டுள்ளன.
இலங்கையிலுள்ள பலதரப்பட்ட வியாபார துறையில் ஈடுபட்டுள்ளோர்.



உங்களது விற்பனை கூடங்களை (STALL)

Scan to register
Exhibitors
Visitors

Contact Us : +94 77 197 8000 | +94 76 535 3232
info@rak-srilankatradefair.com / info@chambertourism.lk
https://www.rak-srilankatradefair.com/reserve-a-stall/
Stall Fee: 1650 USD | 3m x 3m (9sqm)
SME Stall: 875 USD | 2m x 2m (4sqm)

17TH - 19TH MAY 2024
RAK EXHIBITION CENTER, UNITED ARAB EMIRATES

Organized by
In collaboration with
Sri Lanka
EDB
IDB
SIRAJ FINANCE
Event Oraganized by
RE RUSH EVENTS
FINWIN INTERNATIONAL